பதிவு எண்: M. 8811 ★ தொலைபேசி: 51881 சிறப்பு: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 17 (1—8—68) வியாழன் ★ வெளியூர்: ஆடி 18 (2—8—68) வெள்ளி [இதழ்: 41

கடற்கரை எல்லையோரப் பகுதிகளுக்குப் பாதுகாப்பு

தனிக் கடற் படை — விமானப் படைப் பிரிவு ஏற்படும்

"நாட்டின் கடற்கரையோர எல்லைப் பகுதிகள் வழியாகக் கள்ளக் கடத்தலையும், ஊடுருவலையும் தடுப்பதற்காக எல்லைப் பாதுகாப்புப் படைக்கு உதவியாகத் தனியாக ஒரு சிறு கடற்படை — விமானப் படைப் பிரிவை ஏற்படுத்த இந்திய அரசு எண்ணியிருக்கிறது"

என, உள்துறை அமைச்சர் சவான், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

மதுவிலக்கில் காங்கிரசார் 'மயக்கம்'

தஞ்சையில் வேளாண்மைக் கருத்தரங்கு

அமைச்சர்கள் பங்கேற்பு

தஞ்சை, ஆக. 1—

தஞ்சை மாவட்டத்தில் நடைபெறும் விவசாயக் கருத்தரங்கினையொட்டி நடைபெற்ற மாவட்ட விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம், சரசுவதி மகாலுக்கு அருகில் அமைந்துள்ள தனிப் பந்தலில் நேற்று காலை துவங்கியது.

விவசாயப்பிரமுகர்கள், ஊராட்சி ஒன்றியப் தலைவர்கள், மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வருவாய்த்துறை உறுப்பினரும் உணவுத் தானிய உற்பத்தி ஆணையாளருமான கே. எஸ். சிவசுப்பிரமணியம், விவசாய டைரக்டர் பிரபாகர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் ரங்கபாஷ்யம் அனைவரையும் வரவேற்று கருத்தரங்கின் நோக்கத்தினை விளக்கினார்.

வரவேற்புரைக்குப் பின், 10 குழுக்கள் அமைக்கப்பட்டன; உணவு உற்பத்தி சம்பந்தப்பட்ட பெரிய பாசன வசதிகள்—சிறு பாசன வசதிகள், கடனுதவி, உர வகைகள், பூச்சி நோய்க் கொல்லிகள், போக்குவரத்து—என, பிரச்சினைகள் வாரியாக இக்குழுக்கள் அமைந்தன.

பிற்பகலில் இக்குழுக்களின் தலைவர்கள், தங்கள் அறிக்கைகளை அளித்தனர்; பல்வேறு பிரச்சினைகள் பற்றி அக்குழுக்கள், யோசனை

(4-ம் பக்கம் பார்க்க)

மகாத்மா சீடர்களிடை தெளிவில்லை!

நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் இரட்டைக் குரல்

புதுடில்லி, ஜுலை 31—

நாடு முழுவதிலும் மதுவிலக்கைச் செயல்படுத்த வேண்டும் என்பதில் நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

'முழு மதுவிலக்கு வேண்டும்' என்று ஒருசாராரும், 'கூடாது' என்று மற்றொரு சாராரும் கருத்தறிவித்திருக்கின்றனா.

காந்தியார் தமது உயிர்மூச்சாகக் கருதிய இலட்சியமான மதுவிலக்கை, அவருடைய 'சீடர்'கள் என்று சொல்லிக்கொள்ளும் இன்றையக் காங்கிரசார் எந்த அளவுக்கு மதிக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்ட இது ஒன்றே போதும்.

டில்லியில் நடந்த நாடாளுமன்றக் காங்கிரசு உறுப்பினர்கள் கூட்டத்தில் சிலர், 'மதுவிலக்கை ஒரு மாநில அரசின் கொள்கையாகப் பின்பற்றினால், அதனை ஒழுங்காகச் செயல்படுத்த வேண்டும்' என்று வற்புறுத்தினர்; அதே நேரத்தில், மற்றவர்கள், 'சட்டபூர்வமாக மதுவிலக்கைச் செயல்படுத்துவதில் பயனில்லை' என்று கருத்தறிவித்தனர்.

"சிலர் மது அருந்தாதவர்களாக இருக்கலாம்; ஆனால் அவர்கள், மற்றவர்களையும் குடிக்காமல் இருக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது" எனறு அவர்கள் வாதாடினர்.

"மதுவிலக்கு ஆதரவாளர்கள், அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மற்ற பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல்—கட்டாயக் கல்வி — வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தல் போன்ற மற்றக் கொள்கைகளையெல்லாம் மறந்துவிட்டனர். சோஷலிசத்தைக்கூடப் பின்னுக்குத் தள்ளிவிட்டனர்"

என்று திரு. மோகன்தாரியா என்பவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாயும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. மோகன் தாரியா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"என்னுடைய சொந்த மாநிலமான மகாராட்டிரத்தில் மதுவிலக்குச் செயல்படத் துவங்கியபோது மொத்தம் உள்ள ஆயிரம் கிராமங்களில் நான்கு கிராமங்களில் மட்டுமே கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டது; இப்போது 250 கிராமங்களில் கள்ளச் சாராய உற்பத்தி நடந்து வருகிறது."

மைசூர் மாநில முன்னாள் முதலமைச்சரான திரு. அனுமந்தையா பேசுகையில், 'மதுவிலக்கு வெற்றிபெறுவது அதனைச் செயல்படுத்துவதைப் பொறுத்தே இருக்கிறது' என்றார்.

"என்னுடைய சொந்த மாநிலத்தில், (மைசூரில்) மதுவிலக்கு வெற்றி பெருததற்குக் காரணம், அதனைச் செயல்படுத்தும் பொறுப்பில் உள்ளவர்களுக்கே மதுவிலக்கில் நம்பிக்கை இல்லாததுதான்" என்று சுட்டிக்காட்டினார்.

திருமதி ஜெயா பென்ஷா பேசுகையில், மதுவிலக்கை ஆதரித்தார்; 'நம்மால் மதுவிலக்கைச் செயல்படுத்த முடியவில்லை என்றால், அதனைச் செய்பவர்களுக்காவது இடமளித்து நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டும்' என்றார் அவர்.

சென்னைக்குக் காவிரி நீர்த் திட்டம்

தமிழக அரசின் உறுதி

சென்னை, ஜுலை 31—

"ஆண்டுகள் பலவாக சென்னை நகரில் நிலவிவரும் குடி நீர்ப் பற்றுக்குறையைத் தமிழக அரசு எவ்வாறாயினும் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறது. வீராணம் ஏரியிலிருந்து, காவிரி நீரைக் கொண்டுவரும் திட்டம் அது தொடர்பானதுதான்.

ஆனால், இதற்கு ரூ. 25 கோடி செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது; அதற்கேற்ற பொருளாதார வசதி அரசிடம் இல்லை; ஆயினும், வளர்ச்சித் திட்டங்களுக்கு—குறிப்பாகக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் திட்டத்திற்கு ஆயுள் இன்சூரன்சு நிறுவனம், பாங்கிகள் முதலியவற்றிடம் கடன் பெற்றுத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி அரசு தீவிரமாக யோசித்து வருகிறது"

என்று நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, விழா ஒன்றில் தெரிவித்தார்.

'ஹேமவதித் திட்டத்தால் தஞ்சை வறண்டுவிடும்'

'தமிழ்நாட்டு நலனையும் மனத்தில் கொண்டு செயல்படுக'

டெல்லி அரசுக்கு க. இராசாராம் அறிவுறுத்தல்

புதுடில்லி, ஜுலை 31—

"கருநாடக மாநில அரசின் ஹேமவதி அணைத் திட்டம் நிறைவேறினால், காவிரியாற்றிலிருந்து மேட்டூர் நீர்த் தேக்கத்துக்குத் தண்ணீர் வருவது குறைந்துவிடும்; இதனால் தஞ்சை கழிமுகப் பகுதி வறண்ட பகுதியாகிவிடும் அபாயம் உள்ளது; எனவே, ஹேமவதி அணைத் திட்டத்துக்கு அனுமதியளிக்கும்போது, தமிழ்நாட்டின் நலன்களையும் பாதுகாப்பதில் அமைச்சர் அக்கறை காட்டவேண்டும்"

என்று, கழக உறுப்பினர் திரு. கே. இராசாராம், நாடாளுமன்ற மக்களவையில் பேசுகையில் வற்புறுத்தினார்.

மாநிலங்களிடையே ஆற்று நீரைப் பகிர்ந்துகொள்வதற்கான சட்டத் திருத்த மசோதாமீது இன்று மக்களவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. இராசாராம் இதனை வற்புறுத்தினார்.

அசல் சட்டத்தில், உள்ள ஒரு நபர் டிரிபியூனலுக்குப் பதில் மூவர் அடங்கிய டிரிபியூனலை நியமிக்க இத்திருத்த மசோதா வகை செய்கிறது.

அமைச்சர் கருணாநிதி டெல்லி செல்வார்

காவிரியாற்றில் ஹேமவதி என்ற இடத்தில் கருநாடக அரசு அணை கட்ட இருப்பதைத் தமிழக அரசு எதிர்த்துள்ளது. இது தொடர்பாக இரு மாநில அமைச்சர்களும் ஆகஸ்டு 20, 21 ஆகிய நாட்களில் டில்லியில் சந்தித்துப் பேசுவர்; மத்திய அமைச்சர் கே. எல். ராவும் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வர்.

தமிழக அரசின் சார்பில் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் பேச்சு நடத்த டில்லிக்குச் செல்கிறார்.

ஹேமவதி அணையால் தமிழக விவசாயிகள் பாதிக்கப்படுவர் என்பதை அமைச்சர் கருணாநிதி டெல்லியில் எடுத்துரைப்பார்.

மைசூர் அரசின் சார்பில் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் கலந்துகொள்கிறார்.

தமிழகத்திலேயே முதல் முயற்சி

எல்லோருக்கும் இலவச மருத்துவப் பரிசோதனை

மதுரையில் இன்று முதல் துவக்கம்

மதுரை, ஆக. 1—

மதுரை நகராட்சி எல்லைக்குள் வாழும் எல்லா மக்களுக்கும் இலவச மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டமொன்று இன்று முதல் தொடங்குகிறது. 1967-வது ஆண்டுக் கணக்குப்படி இங்கு 4·64 இலட்சம் பேர் வாழ்கின்றனர்.

இங்குள்ள ஒவ்வொரு வீட்டுக்கும், இதற்காகவென்று நியமிக்கப்பட்டுள்ள 20 டாக்டர்கள் சென்று பரிசோதனை செய்வர்.

இரத்தம், மற்றும் சிறுநீரின் தன்மை முதலியவை சோதனை செய்யப்படும். நோயாளிகளாயிருந்தால், அவர்கள் உட்கொள்ள வேண்டிய மருந்துகள் குறித்தும் ஆலோசனை கூறப்படும். 'எக்ஸ்-ரே' எடுக்கப்பட வேண்டியதாயிருந்தால் அதற்கு ஏற்பாடு செய்தும், கடுமையான நோயுள்ளவர்களாயிருந்தால் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தும் இவர்கள் உதவி செய்வர்.

தமிழகத்தில் இப்படி ஒரு திட்டம் செயல்படுத்தப்படுவது இதுவே முதலாவதாகும்.

இச்சோதனைகள் ஓராண்டுக்காலம் நடைபெறும். இப்பகுதி மக்களை மிக அதிகமாகப் பாதிக்கக்கூடிய நோய்கள் என்ன என்பதை அறிவது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

மக்கள் உட்கொள்ளும் உணவின் சத்துக்குறைவின் அளவு என்ன என்பதும் இச்சோதனை மூலமாக அறியப்படும்.

கழகத் தேர்தல்

ஆணையாளர் விவரம்

(திருத்தம்)

3—8—68 பிற்பகல் 3-மணிக்கு

மதுரை வடக்கு—
சமயநல்லூர்
அ. கரிகாலன் எம். சி.

திருச்சி வட்டம்—
தமிழ்ச் சங்கக் கட்டிடம், திருச்சி
காஞ்சி கல்யாணசுந்தரம்

4—8—68 காலை 10 மணிக்கு

மதுரை பெருநகரம்—
திருமண மண்டபம், ஆழ்வார்புரம், மதுரை
அ. கரிகாலன் எம். சி.

திருச்சி பெருநகரம்—
தமிழ்ச் சங்கக் கட்டிடம், திருச்சி
காஞ்சி கல்யாணசுந்தரம்

வந்தவாசி (வ.ஆ)
பயணியர் விடுதி, வந்தவாசி
மு. ச. இளங்கோ எம்.சி.

—தலைமைக் கழகம் தி.மு.க.

தி. மு. க. வட்டக் கழகத் தேர்தல்

ஆணையாளர்களுக்கான குறிப்புகள்

1. ஆகஸ்டு 3, 4-ஆகிய நாட்களில் நடைபெறும் வட்டக் கழகம், வட்டக் கழகத் தகுதி படைத்த பெருநகரக் கழகம ஆகிய அமைப்புக்களுக்கான தேர்தல்களை நடத்திவைக்கும் ஆணையாளர்களைத் தலைமைக் கழகம் அந்தந்த வட்டத்திற்கு அனுப்பிவைக்கும்.

2. அந்தந்த வட்டம் --- வட்டக் கழகத் தகுதிபடைத்த பெருநகரக் கழகத் தேர்தல்கள், மாவட்டச் செயலாளரால் குறிப்பிடப்பட்ட இடங்களில் நடைபெறும்.

3. அந்தந்த வட்டக் கழகத் தேர்தலில் போட்டியிடத் தலைமைக் கழகத்திற்குக் குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பத் தாள் அனுப்பி முறைப்படி பரிசீலனை செய்து தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களும், அவர்கள் போட்டியிடும் பொறுப்புகளும், தலைமைக் கழகத்தால் ஆணையாளரிடம் கொடுக்கும் பட்டியலில் காணப்பெறும். அந்தப் பட்டியலில் கண்டுள்ள வேட்பாளர் விவரங்களை மட்டுமே ஆணையாளர், தேர்தல் நடைபெறும் இடத்தில் முறைப்படி தேர்தல் துவக்கப்படுவதற்கு 2-மணி நேரம் முன்னதாக -- தமிழ் அகர வரிசைப்படி -- அதற்கென வாயிலில் வைக்கப்படும் பலகையில், கூடியுள்ள பிரதிநிதிகள் அனைவரும் தெளிவாகக் காணும் வகையில் எழுதி அறிவிப்பார்.

4. தேர்தல் நடைபெறும் இடத்தில் -- தேர்தலின்போது -- அந்தந்த வட்டத்தைச் சார்ந்த கிளையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுத் தலைமைக் கழகத்திலிருந்து ஆணையாளர் கொண்டு வரும் பட்டியலில் கிளைவாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிநிதிகள் மட்டுமே கூடியிருத்தல் வேண்டும். கூடியுள்ள பிரதிநிதிகளிலிருந்து எந்தப் பொறுப்புக்கும் போட்டியிடாத தோழர்கள் சிலரை ஆணையாளர் தமக்கு உதவியாக நியமித்துக்கொள்ளலாம்; அவர்கள், ஆணையாளர் சொல்வதைச் செய்ய வேண்டியவர்களாவர்.

5. வட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்குத் தலைமைக் கழகத்திலிருந்தே நேரடியாக அவரவர் முகவரிக்கு அடையாளச் சீட்டுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. அந்தச் சீட்டுப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தல் நடைபெறும் இடத்தில் இருக்கவும், தேர்தலில் கலந்துகொள்ளவும் உரிமை படைத்தவராவர். எந்தக் காரணத்தினாலாவது அடையாளச் சீட்டு கொண்டுவரத் தவறிய பிரதிநிதிகள், தக்க ஆதாரத்துடனும் கூடியுள்ள பிரதிநிதிகளில் இரண்டு பேரிடம் எழுத்து மூலமான உறுதிமொழி பெற்றும் அவர்களைத் தேர்தல் கூட்டத்தில் ஆணையாளர் அனுமதிப்பார்.

6. பிரதிநிதிகளின் அடையாளச் சீட்டுப் பரிசீலனை, வருகை தந்த பிரதிநிதிகளின் கையொபபம் பெறுவது ஆகியவை முடிந்த பிறகு ஆணையாளர், தேர்தலைத் துவக்குவதாக அறிவிப்பார். தேர்தலைத் துவக்குவதாக ஆணையாளர் அறிவித்து -- வாக்குப் பதிவு துவக்கிய பிறகு வருகைதரும் பிரதிநிதிகளை, அடுத்த பொறுப்புக்கான தேர்தல்வரை எக்காரணம் கொண்டும் ஆணையாளர் அனுமதிக்கமாட்டார்.

7. தேர்தலைத் துவக்குவதாக ஆணையாளர் அறிவித்ததற்குப் பின், வட்டக் கழக அவைத் தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், மாவட்டக் கழகத்திற்குப் பத்துப் பிரதிநிதிகள் (வட்டக் கழகச் செயலாளர், 'செயலாளர்' என்ற தகுதியாலேயே மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தகுதி பெறுகிறார்) ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள், ஒன்றன்பின் ஒன்ருக நடைபெறும். மாவட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பத்துப் பிரதிநிதிகளில், அந்தந்த வட்டத்தில் எத்தனை முனிசிபல் நகரங்கள் இருக்கின்றனவோ அத்தனைப் பிரதிநிதிகள் போக மீதியுள்ள எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். (உதாரணமாக — சைதாப்பேட்டை வட்டத்தில் திருவொற்றியூர், ஆலந்தூர், தாம்பரம் ஆகிய மூன்று முனிசிபல் நகரங்கள் உள்ளன ; அந்த வட்டத்தில் மூன்று பிரதிநிதிகள் போக மீதி ஏழுபேரை மட்டுமே மாவட்டக் கழக உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள் நடைபெற வேண்டும். முனிசிபல் நகர்களே இல்லாத வட்டத்தில் முழுமையாக பத்துப்பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்). ஒரு பொறுப்புக்கான தேர்தல் முடிந்து முறைப்படி முடிவு அறிவித்த பின்பே அடுத்த பொறுப்புக்கான தேர்தலை ஆணையாளர் துவக்குவார்.

8. அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புகளுக்கான விண்ணப்பங்களை எக்காரணம் கொண்டும் தேர்தல் நாளில் ஆணையாளர் ஏற்றுக்கொள்ளமாட்டார். தலைமைக் கழகத்திற்கு முன்கூட்டி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே அந்தத் தேர்தல்கள் நடைபெறும்.

9. 8-வது பாராவில் குறிப்பிட்டுள்ள தேர்தல்கள் முறைப்படி முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டதும், பதினொரு செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலை ஆணையாளர் அறிவித்துத் துவக்குவார்.

10. வட்டச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு மட்டும் ஆணையாளர், தலைமைக் கழகம தம்மிடம் கொடுத்துள்ள பட்டியலில் குறிபபிட்டுள்ள வேட்பாளர்களோடு, போட்டியிட விரும்பி மேலும் அந்த இடத்திலேயே முறைப்படி நிறைவு செய்து தரப்படும் விண்ணப்பத் தாள்களையும் உரிய கட்டணத்தோடு ஏற்றுக்கொள்வார். தலைமைக் கழகத்தில் ஏற்கனவே

(இதன் தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

கழகத் தேர்தல்

வட்டக் கழகம்---பெருநகரக் கழகம்

ஆகிய அமைப்புக்களின் தேர்தல்

3--8--68 சனி பிற்பகல் 3-மணி

கீழ்க்கண்டுள்ள விவரப்படி 3—8—68 சனி பிற்பகல் 3-மணிக்கு வட்டக்கழகம்—பெருநகரக் கழகம் ஆகியவைகள் தேர்தல்கள் நடைபெறும். தேர்தல் ஆணையாளர்கள், தேர்தல் நடைபெறும் இடத்திற்கு 2 மணி நேரத்திற்கு முன்னதாகவே வருகைதந்து, போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களை அறிவிப்பார்.

குறிப்பு : 'பெருநகரம்' என்ற குறிப்பிடப்பட்டவை தவிர மற்றவை 'வட்டங்கள்' ஆகும்.

மாவட்டம்	வட்டம்—பெருநகரம்	தேர்தல் நடைபெறும் இடம்	ஆணையாளர்
செங்கற்பட்டு	காஞ்சி (பெருநகரம்)	சண்முகம் நினைவு மன்றம்	வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
	சைதை வட்டம்	வில்லிவாக்கம் பள்ளி	வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல். எம்.சி.
	உத்திரமேரூர்	பயணிகள் விடுதி உத்திரமேரூர்	சு. பாலன் எம்.சி.
வட ஆற்காடு	வேலூர்	பயணிகள் விடுதி, ஆம்பூர்	லோகநாதன் எம் சி.
	போளூர்	பயணிகள் விடுதி, போளூர்	கோ. இளவரசு எம்.சி.
	செங்கம்	பயணிகள் விடுகி, செங்கம்	இரா. சடகோபன் எம்.சி.
	வாலாசா	பயணிகள் விடுதி, இராணிப் பேட்டை	கே. எஸ். தினகரன்
	திருப்பத்தூர்	பயணிகள் விடுதி, திருப்பத்தூர்	எம். கமலநாதன் எம்.பி.
தெ. ஆற்காடு	செஞ்சி	பயணிகள் விடுதி, செஞ்சி	சைதை சம்பந்தம் எம்.சி.
	விழுப்புரம்	,, ,, விழுப்புரம்	ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.
	விருத்தாசலம்	,, ,, விருத்தாசலம்	கோவை செழியன் பி.ஏ.
	திருகோயிலூர்	,, ,, திருக்கோவிலூர்	ம. சு. இராமதாஸ்
புதுவை	புதுவை பெருநகரம்	திருமண மண்டபம், 33, அம்பலத்தாடு ஐயர் மடத் தெரு, புதுவை	க. பார்த்தசாரதி எம்.சி.
தஞ்சை	தஞ்சை	கழகக் கட்டிடம், திருவையாறு	அன்பில் தர்மலிங்கம்
	குடந்தை	பயணிகள் விடுதி, குடந்தை	அ. பொ. அரசு எம்.எல்.ஏ.
	நன்னிலம்	விவேகானந்தா வாசகசாலை, நன்னிலம்	ந. சணபதி பி எஸ்சி., பி.எல்.
	அறந்தாங்கி	பயணிகள் விடுதி, அறந்தாங்கி	ஏ எஸ். இராமன் எம்.சி.
	மாயூரம்	,, ,, மாயூரம்	எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி.
	திருத்துறைப் பூண்டி	ஏ. எல். ஏ. அகமது கட்டிடம், திருத்துறைப்பூண்டி	சா. கணேசன் எம்.சி.
	ஒரத்தநாடு	குமரி பிரஸ், ஒரத்தநாடு	ஜி. நீலமேகம் பி.எஸ்சி , பி.எல்.
திருச்சி	திருச்சி	தமிழ்ச் சங்கக் கட்டிடம் (மேலப் புலிவார் ரோடு)	என். கிட்டப்பா எம்.எல்.ஏ.
	லால்குடி	சாந்தி தியேட்டர், பூவாளூர்	டி. என். கிருஷ்ணன் எம்.சி.
	செயங்கொண்டம்	பயணிகள் விடுதி, செயங்கொண்டம்	பெரம்பூர் மாசிலாமணி
	முசிறி	,, முசிறி	கே. எம். கண்ணபிரான்
	மணப்பாறை	,, மணப்பாறை	புருடோத்தமன் எம்.சி.
	திருமயம்	,, திருமயம்	எம். கன்னியப்பன் எம்.சி.
தருமபுரி	தருமபுரி	,, அதமன்கோட்டை	ந. செயராமன்
	ஒசூர்	,, ஒசூர்	ஆ. மு. நாராயணன்
சேலம்	சேலம்	விசயராகவாச்சாரியார் திடல், சேலம்	வை. இரத்தினவேலு பி.ஏ.
	ஆத்தூர்	ஆறுமுகனார் மன்றம், ஆத்தூர்	ப. க. வேணுகோபால்
	நாமக்கல்	பி. எஸ். ஆர். திடல், நாமக்கல்	ஓ. எஸ். பாலசுந்தரம்
	சங்ககிரி	பயணிகள் விடுதி, சங்ககிரி	கே. காமாட்சி
	சேலம் நகரம்	விசயராகவாச்சாரியார் திடல், சேலம்	கந்தசாமி பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.
கோவை	கோபி	நெடுஞ்சாலைத் துறை பயணிகள் விடுதி, கோபி	கோ. செங்குட்டுவன்
	அவிநாசி	பயணிகள் விடுதி, அவிநாசி	நீலநாராயணன்
	தாராபுரம்	,, தாராபுரம்	முத்துராமலிங்கம்
	உடுமலை	,, உடுமலை	டி. கே. கபாலி எம்.சி.
	பவானி	ஆனந்தா ரைஸ் மில், பவானி	எ. செல்வராஜ் எம்.சி.
	பல்லடம்	பயணிகள் விடுதி, பல்லடம்	மு. வரதராசன்
மதுரை	மதுரை வடக்கு	சமயநல்லூர்	மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., எம்.சி.
	மதுரை தெற்கு	திருப்பரங்குன்றம் திருமண மண்டபம்	டி. கே. பொன்னுவேலு பி.ஏ., எம்.எல்.சி.
	திருமங்கலம்	பயணிகள் விடுதி, திருமங்கலம்	கோமகன்
	திண்டுக்கல்	,, செம்பட்டி	க. அன்பிற்கரசன் எம்.சி.
	நிலக்கோட்டை	,, கோடை ரோடு	இலட்சுமிபதி எம்.சி.
	கொடைக்கானல்	,, கொடைக்கானல்	புலவர் நடேசன்
	வேடசந்தூர்	பயணியர் விடுதி, வேடச்சந்தூர்	மோகனரங்கம் எம்.சி.
	உசிலம்பட்டி	,, ,, உசிலம்பட்டி	வேணுகோபால் எம்.சி.
முகவை	இராமநாதபுரம்	,, ,, இராமநாதபுரம்	எஸ். வி. வேலு
	சிவகெங்கை	,, ,, சிவகெங்கை	தமிழ்மணி எம்.சி.
	சாத்தூர்	,, ,, சாத்தூர்	சுப்பிரமணியம் எம்.சி.
	முதுகுளத்தூர்	,, ,, முதுகுளத்தூர்	தி. சு. நல்லதம்பி எம்.சி.
நெல்லை	நெல்லை	குறுக்குத்துறை திருமணமண்டபம்	இரா. சம்பந்தம் எம்.சி.
	திருவைகுண்டம்	பயணியர் விடுதி, திருவைகுண்டம்	அப்துல் காதர் பி.எஸ்சி.
	சங்கரன்கோவில்	,, ,, சங்கரன்கோயில்	காஞ்சி மணிமொழியார்
	திருச்செந்தூர்	,, ,, திருச்செந்தூர்	குமார்
	தென்காசி	திவான் பங்களா, குற்றாலம்	மா. தங்கவேலர்
	செங்கோட்டை	பயணியர் விடுதி, செங்கோட்டை	நாகராசன் எம்.சி.
குமரி	நாகர்கோயில் வட்டம்	தெங்கம்புதூர் தியேட்டர், அகத்தீஸ்வரம்	கே. கோவிந்தசாமி எம்.சி.
	கல்குளம்	சேது டாக்கீஸ், தக்கலை	பி. கே. துரைக்கண்ணு
நீலகிரி	குன்னூர்	பயணியர் விடுதி, குன்னூர்	டி கே. சிவகுமாரன்

[4--8--68-ம் நாள் நடைபெறும் தேர்தல்கள் பற்றிய விவரம் 3-ம் பக்கத்தில் பார்க்கவும்]

4--8--68 ஞாயிறு நடைபெறும் தேர்தல்கள்

காலை 10-மணி

[தேர்தல் ஆணையாளர்கள், தேர்தல் நடைபெறும் இடத்திற்கு இரண்டு மணி நேரம் முன்னதாகவே வருகை தந்து போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்களை அறிவிப்பார்]

மாவட்டம்	வட்டம்—பெருநகரம்	தேர்தல் நடைபெறும் இடம்	ஆணையாளர்
செங்கற்பட்டு	காஞ்சி	சண்முகம் நினைவு மன்றம், காஞ்சி	வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
	பொன்னேரி	பயணியர் விடுதி, பொன்னேரி	பொ. கு. ராமதாஸ் எம்.சி.
	திருவள்ளூர்	,, ,, திருப்பாச்சூர்	என். ஏ. பழனி எம்.சி.
	திருத்தணி	, ,, திருத்தணி	எஸ். கன்னியப்பன் எம்.சி.
	திருப்பெரும்புதூர்	,, ,, பூவிருந்தவல்லி	ஜேசுதாஸ் எம்.சி.
	செங்கற்பட்டு	,, ,, செங்கல்பட்டு	வேலூர்நாராயணன் எம்.ஏ.பி.எல்.
	மதுராந்தகம்	கழகக் கட்டடம், மதுராந்தகம்	சு. பாலன் எம்.சி.
வட ஆற்காடு	வேலூர் (பெருநகரம்)	டவுன் ஹால், வேலூர்	லோகநாதன் எம்.சி.
	ஆரணி	பயணியர் விடுதி, ஆரணி	கோ. இளவரசு எம்.சி.
	அரக்கோணம்	,, ,, அரக்கோணம்	சிட்டிபாபு எம்.பி.
	திருவண்ணாமலை	,, ,, திருவண்ணாமலை	இர. சடகோபன் எம்.சி.
	குடியேற்றம்	நகரக் கழக அலுவலகம், குடியேற்றம்	டபிள்யூ.பி.பி. சுந்தரம்
	செய்யாறு	பயணியர் விடுதி, செய்யாறு	அ. கபாலமூர்த்தி எம்.சி.
	வந்தவாசி	,, ,, வந்தவாசி	கரிகாலன் எம்.சி.
தெ ஆற்காடு	திண்டிவனம்	பயணியர் விடுதி, திண்டிவனம்	சைதை சம்பந்தம் எம்.சி
	சிதம்பரம்	,, சிதம்பரம்	ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.
	கடலூர்	வர்த்தகர் சங்கம், கடலூர் (என்.டி.)	கோவை செழியன் பி.ஏ.
	கள்ளக்குறிச்சி	பயணியர் விடுதி, கள்ளக்குறிச்சி	ந சு. மணி
புதுவை	புதுவை	அனந்தம்மாள் சத்திரம், வில்லியனூர், புதுவை	க. பார்த்தசாரதி எம்.சி.
தஞ்சை	தஞ்சை பெருநகரம்	இராமநாதன்செட்டியார் மண்டபம்	அன்பில் தருமலிங்கம்
	குடந்தை பெருநகரம்	கழகக் கட்டிடம், குடந்தை	அ. பொ. அரசு எம்.எல்.ஏ.
	பாபநாசம்	பயணியர் விடுதி, பாபநாசம்	ந. கணபதி பி.எஸ்சி.,பி.எல்.
	பட்டுக்கோட்டை	,, பட்டுக்கோட்டை	ஏ. எஸ் இராமன் எம் சி.
	சீர்காழி	,, சீர்காழி	எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி.
	நாகை	பாண்டியன் தியேட்டர்	சா. கணேசன் எம்.சி.
	மன்னார்குடி	ப. நா. இல்லம், மன்னை	ஜி. நீலமேகம் பி.எஸ்சி.,பி.எல்.
திருச்சி	அரியலூர்	பயணியர் விடுதி, அரியலூர்	டி. என். கிருஷ்ணன் எம்.சி.
	பெரம்பலூர்	இலட்சுமி தியேட்டர், பெரம்பலூர்	மு. மாசிலாமணி
	குளித்தலை	பயணியர் விடுதி, குளித்தலை	கே. எம். கண்ணபிரான்
	கரூர்	,, கரூர்	புருடோத்தமன் எம்.சி.
	திருச்சி பெருநகரம்	தமிழ்ச் சங்கக் கட்டிடம், திருச்சி	என். கிட்டப்பா எம்.எல்.ஏ.
	குளத்தூர்	பயணியர் விடுதி, குளத்தூர்	எம். கன்னியப்பன் எம்.சி.
	ஆலங்குடி	தி.மு.க. அலுவலகம், ஆலங்குடி	எம். கன்னியப்பன் எம்.சி.
தருமபுரி	கிருஷ்ணகிரி	கே. ஆர். பி. பயணியர் விடுதி	ந. செயராமன்
	அரூர்	சித்ரா டாக்கீஸ்	ஆ. மு. நாராயணன்
சேலம்	திருச்செங்கோடு	வட்டக் கழக அலுவலகம், திருச்செங்கோடு	ப. க. வேணுகோபால்
	மேட்டூர்	பாப்பம்மாள் திருமண மண்டபம், மேட்டூர்	ஓ. எஸ். பாலசுந்தரம்
	ஓமலூர்	பயணியர் விடுதி, ஓமலூர்	கந்தசாமி எம்.எல்.ஏ.
	இராசிபுரம்	ஏசுநாதர் ஆலய மண்டபம், இராசிபுரம்	கே. காமாட்சி
கோவை	கோவை நகரம்	கழகக் கட்டிடம், கோவை	கோ. செங்குட்டுவன்
	கோவை	நகராட்சிப் பயணியர் விடுதி, கோவை	நீல. நாராயணன்
	சிங்காநல்லூர் பெருநகரம்	வாவியர் திருமண மண்டபம், சிங்காநல்லூர்	முத்தராமலிங்கம்
	திருப்பூர் பெருநகரம்	பயணியர் விடுதி, திருப்பூர்	டி. கே. கபாலி எம்.சி.
	ஈரோடு பெருநகரம்	நகராட்சிப் பயணியர் விடுதி, ஈரோடு	வை. ரத்தினவேலு பி.ஏ.
	ஈரோடு	பயணிகள் விடுதி, பெருந்துறை	ஏ. செல்வராசு எம்.சி.
	பொள்ளாச்சி	வெங்கடேசுவரா காலனி, எம்.எல்.ஏ. விடுதி, பொள்ளாச்சி	மு. வரதராசன்
மதுரை	மதுரை பெருநகரம்	திருமண மண்டபம், ஆழ்வார்புரம், மதுரை	மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., எம்.சி.
	மேலூர்	பயணியர் விடுதி, மேலூர்	து. வேணுகோபால் எம்.சி.
	திண்டுக்கல் பெருநகரம்	,, திண்டுக்கல்	அன்புக்கரசன் எம்.சி.
	பழனி	,, பழனி	லட்சுமிபதி எம்.சி.
	பெரியகுளம்	,, பெரியகுளம்	புலவர் நடேசன்
	உத்தமபாளையம்	,, உத்தமபாளையம்	மோகனரங்கம் எம்.சி.
முகவை	பரமக்குடி	பயணியர் விடுதி, பரமக்குடி	எஸ். வி. வேலு
	திருப்பத்தூர்	, திருப்பத்தூர்	தமிழ்மணி எம்.சி.
	திருவில்லிபுத்தூர்	,, திருவில்லிபுத்தூர்	சுப்பிரமணி எம்.சி.
	திருவாடானை	,, திருவாடானை	தி. சு. நல்லதம்பி எம்.சி.
	அருப்புக்கோட்டை	,, அருப்புக்கோட்டை	கோமகன்
நெல்லை	நெல்லை பெருநகரம்	குறுக்குத்துறை திருமணமண்டபம்	இரா. சம்பந்தம் எம்.சி.
	தூத்துக்குடி பெருநகரம்	வடக்கூர் தி. மு. க. உடற்பயிற்சிக் கழகம்	அப்துல் காதர் பி.எஸ்சி.
	கோவில்பட்டி	டூரிங் சினிமா, விளாத்திக்குளம்	காஞ்சி மணிமொழியார்
	நாங்குநேரி	பயணியர் விடுதி, வள்ளியூர்	குமார்
	அம்பாசமுத்திரம்	,, அம்பாசமுத்திரம்	மா. தங்கவேலர்
குமரி	நாகர்கோவில் பெருநகரம்	,, வடசேரி	கே. கோவிந்தசாமி எம்.சி.
	விளவங்கோடு	,, குளித்துறை	பி. கே. துரைக்கண்ணன்
	தோவாளை	,, பூதபாண்டி	டி. கே. பொன்னுவேலு பி.ஏ., எம்.எல்.சி.
நீலகிரி	கூடலூர்	பயணியர் விடுதி, கூடலூர்	டி.கே. சிவகுமாரன்
	உதகை	,, உதகை	,,

குறிப்பு: (1) நீலகிரி மாவட்டத்தில் 4—8—68 அன்று கூடலூரில் காலை 10 மணிக்கும் உதகையில் பிற்பகல் 3 மணிக்கும் தேர்தல் நடைபெறும்.

(2) திருச்சி மாவட்டத்தில் 4—8—68 அன்று குளத்தூரில் காலை 10 மணிக்கும் ஆலங்குடியில் பிற்பகல் 3 மணிக்கும் தேர்தல் நடைபெறும்.

பரிசு சீட்டு விற்பனையாளர் நியமனம்

தேர்ந்தெடுப்பதில் அண்ணா வகுத்துள்ள முறை

வேலூர், ஜூலை 30.—

அரசு இயந்திரம் மிகவும் தூய்மையானதாக இயங்கவேண்டும் என்பதில் கழகம் மிகுந்த அக்கறைகொண்டு செயல்பட்டுவருவது நாடறிந்ததே.

தமிழக அரசின் பரிசுக் குலுக்கல் திட்டத்தில் எந்தவித அதிகார நிர்ப்பந்தமும் ஏற்படக்கூடாது என்பதற்காக, முதலமைச்சர் அண்ணா அவர்கள், வழிமுறை ஒன்றை வகுத்துள்ளார்.

இதன்படி, பரிசு டிக்கெட் விற்பனையாளர் (ஏஜெண்டு) நியமனத்துக்காக விண்ணப்பம் அனுப்பியிருப்பவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த அமைப்பையும் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது; அதாவது நகராட்சி, ஊராட்சி மன்றங்கள், மற்றும்கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் மனுச் செய்திருந்தால், அவற்றை முதலிலேயே தள்ளிவிட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜூலை 27-ம் நாளுக்குள் வந்து சேர்ந்த எல்லா மனுக்களையும் குலுக்கியெடுத்து ஏஜெண்டுப் பொறுப்புக்கள் வழங்கப்படும்; ஆக. 7-ம் நாளுக்குள் இப்பணி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மைதா -- ரவை விலைகள் குறைக்கப்படுகின்றன

எல்லாக் கடைகளிலும் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கலாம்

தமிழக அரசு ஏற்பாடு-உணவு அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, ஜூலை 31—

மைதா, ரவை ஆகியவற்றின் விலைகள் ஆகஸ்டு முதல் நாளிலிருந்து மாநிலம் முழுவதிலும் கிலோவுக்கு 5 காசு குறைக்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்தது.

உணவு அமைச்சர் மதியழகன் இன்று அளித்த பேட்டியில் சொன்னதாவது :—

'' இப்போது குவிண்டால் ரூ. 110-க்கு விற்கப்படும் மைதா, இனி குவிண்டால் ரூ. 105-க்குக் கிடைக்கும்.

ரவையின் விலை குவிண்டால் ரூ. 114-லிருந்து ரூ. 109 ஆகக் குறைக்கப்படுகிறது; அதாவது, மைதா—கிலோ ஒரு ரூபாய் 5 காசுக்கும், ரவை—கிலோ ஒரு ரூபாய் 9 காசுக்கும் கிடைக்கும்.

கேள்விகளுக்குப் பதிலளித்து அமைச்சர் மேலும் சொன்னதாவது :—

"ரேஷன் கடைகளில் கார்டுகாரர்களுக்கு இந்த இரு கோதுமைப் பொருள்களும் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும். ரேஷன் கடைக்கு வெளியே மற்ற கடைகளிலும் இந்த இரு பொருள்களையும் இதே விலைக்கு விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது!

கோதுமை ரேஷனை இரண்டு கிலோவிலிருந்து ஐந்து கிலோவாக அதிகரித்து ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. போதுமான கிராக்கி இருந்தால், கோதுமையை எவ்வளவு தேவையானாலும் வழங்கசெய்ய ஏற்பாடு செய்யப்படும்."

சுக்கிரனில் காணப்படுவது என்ன?

கலிபோர்னியா, ஜூலை 30—

"சுக்கிரன் கிரகத்தில் கரடுமுரடான மூன்று பரப்புகள் தெரிகின்றன; இவைகள், மலைகளாக இருக்கலாம்.

"இந்தக் கிரகத்தில் எப்போதும் பூமியை நோக்கியுள்ள பகுதியின் வடமேற்கில் இவை காணப்படுகின்றன; ஆயிரக்கணக்கான சதுரமைல் பரப்புக்கு இவ்வாறு காணப்படுகின்றன"

என்று, அமெரிக்க ஜெட் சோதனைக்கூடத்தைச் சேர்ந்த டாக்டர் ரிச்சர்டு கோல்ட் ஸ்டீன் கூறியுள்ளார்.

ராடார் கதிர்களின் உதவியாலும், இந்தச் சோதனை நிலையத்திலுள்ள 210 அடி நீளமுள்ள ஏரியல் உதவியாலும் அவர் இதைக் கண்டுபிடித்தாராம்.

முடக்கப்பட்ட கப்பல்கள் விரைவில் விடுவிக்கப்படும்

இலண்டன், ஆக. 1—

அரபு – இஸ்ரேல் போர் நடைபெற்றதிலிருந்து சூயஸ் கால்வாயில் 14 திங்கள்களாக முடக்கி வைக்கப்பட்டிருந்த 15 கப்பல்களும் விரைவில் விடுவிக்கப்பட்டுவிடுமெனத் தெரியவருகிறது.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விண்ணப்பம் கொடுத்துள்ள தோழர்களும், அங்கு விண்ணப்பம் கொடுக்கும் தோழர்களும் போட்டியிடுவதாக வேட்பாளர் அறிவித்து, செயற்குழு உறுப்பினர் தேர்தலைத் துவக்கி நடத்துவார்.

11. ஆணையாளரால் அகர வரிசைப்படி போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் எழுதப்படும். அவரால் எழுதப்படும் பெயருக்கு முன்னால் வரும் வரிசை எண்ணையே வாக்குச் சீட்டில் குறிப்பிட்டு பிரதிநிதிகள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யவேண்டும்.

12. தேர்தலில் இரு வேட்பாளர்கள் சம வாக்குகள் பெறும் நிலைமை ஏற்பட்டால், முறைப்படி குலுக்குச் சீட்டு மூலம் முடிவு கண்டு---உரிய விளக்கத்தோடு ஆணையாளர் அறிவிப்பார்.

13. இருவருக்குமேல் சம வாக்கு பெறும் நிலைமை ஏற்பட்டால், அப்படிச் சம வாக்கு பெற்ற தோழர்கட்கு மட்டுமே மறுதேர்தல் நடத்தி முடிவினை அறிவிப்பார்.

14. தேர்தல் துவங்கி முடியும்வரையில், எதிலும் ஆணையாளரின் தீர்ப்பே முடிவானது.

15. தேர்தலுக்குத் தேவையான சாதனங்களை, தற்போது பொறுப்பிலுள்ள வட்டச்செயலாளரைக் கேட்டுப் பெறுவார்.

16. தேர்தல் குறித்து மற்ற விவரங்களுக்குக் கழகச் சட்டதிட்டம்---தேர்தல் விதிமுறைகளின்படி ஆணையாளர் செயல்படுவார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

3--8--68

புதுவை

சின்னகடை எம். ஜி. ஆர். மன்ற 5-வது ஆண்டு விழா; மாலை 6-மணிக்கு செஞ்சிச் சாலைத் திடலில்; தலைவர்: அ. நெடுமாறன்; பேசுவோர்: என். வி. என். செலவம், எஸ். கஸ்தூரி, சிவப்பிரகாசம், எம். ஏ. சண்முகம், சு. பெருமாள், செ. முத்து, கே. ஏ. ஜலீல், டி. செல்வராசு.

கடலூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு சான்றோர்பாளையம் திடலில்; தலைவர்: கி. மன்மதன்; பேசுவோர்: இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., ஏ. வி. தண்டபாணி, கி. கோவிந்தராசன். (சென்னை சதாசிவம்–மோகன கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

சென்னை — சைதை

கலைஞர் குறள் வளர்ச்சி மன்றத் துவக்கவிழா; மாலை 7 மணிக்கு மேட்டுப்பாளையத்தில்; தலைவர்: கு. சீ. இராமாநுசம்; பேசுவோர்: சி. சிட்டிபாபு எம்.பி., அ. ஜின்னா, காஞ்சி மணிமொழியார், அ. மணி, எஸ். இராசவேலு, மு. சீ. நம்பி. சி. செகநாதன்.

கலவை

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மந்தைவெளித் திடலில்; தலைவர்: கே. ஜே. சௌந்தரராசன்; பேசுவோர்: க. அன்பழகன் எம்.பி., நா. வீராசாமி எம்.எல்.ஏ., ஜி. விசுவநாதன் எம்.பி., தோப்பூர் திருவேங்கடம், மற்றும் பலர்.

பரிசுச் சீட்டு விற்பனையாளர்

சென்னையில் 120-பேர் நியமிக்கப்படுவர்

சென்னை, ஆக. 1—

தமிழக அரசு நடத்தும் லாட்டரிச் சீட்டு விற்பதற்கு, சென்னை நகருக்கு மட்டும் 120-விற்பனையாளர்கள் நியமிக்கப்படுவர்.

சென்னை நகருக்கு 12-விற்பனையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று முதலில் அறிவிக்கப்பட்டது; இதற்கு 2000-பேர் மனுப் போட்டு இருக்கிறார்கள்.

இதுபோல் ஒவ்வொரு இடத்திலும் அதிகமானபேர் மனுச் செய்து இருப்பதால், அதிக விற்பனையாளர்களை நியமிப்பதற்கு, அரசு முடிவு செய்திருக்கிறது.

ஒரு சர்க்கிளுக்கு 10-பேர்வீதம் 12-சர்க்கிளுக்கு 120-பேர் நியமிக்கப்படுவார்கள்.

இதுபோல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொரு 3-ம் கிரேடு நகராட்சிகள், டவுன்ஷிப்களுக்கும் தலா 5-விற்பனையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

2-ம் கிரேடு, முதல் கிரேடு நகராட்சிகளுக்குத் தலா 10-பேரும், தனி கிரேடு நகராட்சிகளுக்குத் தலா 15-பேரும் நியமிக்கப்படுவார்கள்.

விற்பனையாளர்களை, அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் நியமிப்பார்கள்.

கலெக்டர்—தமிழ்நாடு அரசாங்கப் பதிவுபெற்ற அதிகாரி—மற்றும் கட்சி -- பதவி சம்பந்தமற்ற ஒருவர்—ஆகிய 3-பேர் அடங்கிய குழுமுன்பு சீட்டுக் குலுக்கிப் போட்டு, விற்பனையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

வருகிற 6-ம் நாளுக்குள் விற்பனையாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வேலை முடிந்துவிடும்.

தி.மு.க. அரசின் முயற்சி மொழிச் சிக்கலைத் தீர்க்கும்

‘எல்லா மொழிகளுக்கும் சம உரிமை வேண்டும்’ என்ற கோரிக்கையை முன்வைத்த பெருமை கழகத்தையே சாரும்

செழியன் மசோதாவால் நாட்டு ஒற்றுமை நிலைக்கும்

சென்னை, ஆக 1—

“மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமிழக அரசின் முயற்சிகளே பயன்அளிப்பவையாகும்”

என்று, ‘சுதேசமித்திரன்’ ஏட்டின் புதுடில்லி அரசியல் நிருபர் திரு. கி. கஸ்தூரி ரங்கன் எழுதியுள்ளார்.

‘அரசியல் சட்டத்தில், எல்லா மொழிகளுக்கும் எல்லாவகையிலும் சம தகுதி ஏற்பட வேண்டும்’ என்ற கோரிக்கையைத் தைரியமாக தேசிய அரங்கில் முன்வைத்த பெருமை தமிழக தி. மு. க. அரசையே சாரும்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லியிலிருந்து அவர் எழுதியுள்ள செய்திமடலில், கழக உறுப்பினர் திரு இரா. செழியன் அவர்கள், அண்மையில் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த மசோதாவைக் குறிப்பிட்டு எழுதியுள்ளதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

“சென்ற வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கலான முக்கியமான ஒரு மசோதாவை பத்திரிகைகள் சரிவரக் கவனிக்காமல் விட்டுவிட்டன.

இரா. செழியனின் அரசியல் சட்டத்தின் 120-வது சட்டத்தைத் திருத்தக் கோரும் மசோதா ஒன்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இம்மசோதாவின் நோக்கம், ‘நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள், தங்கள் தாய்மொழியிலேயே பேச அனுமதிக்கப்பட வேண்டும்; இப்போது ஆங்கிலம் அல்லது இந்தியையே அனுமதிகும் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்’ என்பதாகும்,

நடைமுறையில் நாடாளுமன்றத்தில், எந்த மொழியிலும் பேசலாம் என்ற வழக்கம் இருப்பது உண்மைதான்; ஆனால், இந்தி அல்லது ஆங்கிலத்தில் பேசாமல் தமிழிலோ வேறு எந்த மொழியிலோ பேசினால் அம்மொழிக்காரர்களைத் தவிர வேறு யாரும் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. அப்பேச்சு நாடாளுமன்ற ரிகார்டிலும ஏறுது. பத்திரிகைக்காரர்களும் அதை ஒதுக்கிவிடுகின்றனர்.

‘தமிழிலும், கன்னடத்திலும் நாடாளுமன்றத்தில் பேசத்துணிபவர்கள், ஒன்று—மொழி வெறி பிடித்த குறுகிய நோக்கக்காரராக இருக்கவேண்டும்; அல்லது, ஆங்கிலமும் இந்தியும் தெரியாத அப்பாவியாக இருக்க வேண்டும்’ என்ற கருத்தே நிலவி வருகிறது; ‘இப்படிப்பட்ட நபர், ஏதும் முக்கியமாக சொல்லிவிட முடியாது’ என்ற அலட்சியமும் கூடவே வந்துவிடுகிறது.

செழியன் மசோதா ஒப்புக்கொள்ளப்பட்டால், நாடாளுமன்றத்தில் பதினான்கு மொழிகளிலும் பேசலாம்; குறிப்பிட்ட மொழி தெரியாதவர்கள் அப்பேச்சின் மொழிபெயர்ப்பை வேறு மொழியில் கேட்கலாம்.

ஒன்றுக்கொன்று பெரும் அளவில் வேறுபடும் மொழிகள் அத்தனையும் நாடாளுமன்றத்தில் செல்லுபடியானால்தான் நாட்டின் ஒற்றுமை நிலைக்கும்.

செழியன் கூறியபடி, இப்போதுள்ள இரு மொழி முறை, தெற்கிலிருந்தும், இந்தி வழங்காத பிற இடங்களிலிருந்தும் வரும் உறுப்பினர்கள், தமது வாதத் திறமையை முற்றிலும் காணபிக்க முடியாமற்போகிறது!

தங்கள் ஊரில், ‘சிறந்த பேச்சாளர்’ என்ற பெயரெடுத்தவர்கள் கூட, மொழிச் சங்கடத்தினால், நாடாளுமன்றத்தில் வாய்ப்பூட்டுடன் உட்காரவேண்டி வந்து விடுகிறது.

அவ்வப்போது மொழிபெயர்ப்பு வேண்டும் என்றால், சில பிரச்சினைகள் எழத்தான் செய்யும்; ஆனால், இன்றைய நவீன இயந்திர உலகில் இதுபோன்ற பிரச்சினைகள் எளிதாகத் தீர்த்துவிட வசதியுண்டு. ‘நாட்டு ஒற்றுமை’ என்ற நோக்கை வைத்துப் பார்க்கும்போது, இதை ஒரு பொருட்டாகவும் மதிக்கப்படக் கூடாது.

‘தாய்மொழியில் பேசும் உரிமை, அரசியல் சட்டபூர்வமாகக் கிடைக்கவேண்டும் என்று. செழியன் வற்புறுத்தியிருக்கிறார். இதற்கு அரசாங்கமோ இந்திக்காரர்களோ தடையாக இருக்கக் காரணம் ஏதும் இருக்கமுடியாது. பின்னால் இம்மசோதா மீது நடைபெறவிருக்கும் விவாதத்தின்போதுதான் இந்திக்காரர்களின் மனப்போக்கு வெளிப்படும்.

அவர்களில் பலர், ‘இந்திக்கு ஈடாக வேறு எந்த மொழியும் தகுதி பெற்றுவிடக்கூடாது’ என்ற கருத்துள்ளவர்கள்.

‘பிற மொழிகளைத் தாழ்த்தி வைத்தால், தன் மொழி தானே வளரும்’ என்ற கண்மூடித்தனமான மனப்போக்கும் அவர்களுக்கு உண்டு.

“அரசியல் சட்டத்தில் எல்லா மொழிகளுக்கும் — எல்லா வகையிலும் சமமான தகுதி ஏற்பட வேண்டும்” என்ற கோரிக்கையைத் தைரியமாக தேசிய அரங்கில் முன்வைத்த பெருமை தமிழகத் தி.மு.க. அரசைச் சேரும்.

இதை ஒரு போராட்டமாகவே மதித்துக் கடைசிவரையில், தளராமல் முயன்று வரவேண்டும்.

இம்முயற்சியின் ஒரு முக்கிய கட்டம் செழியனின் மசோதாவாகும்.”

மருத்துவமனையில் புதுவை செ. முத்து

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி வந்து பார்த்தார்

புதுவை, ஜூலை 31—

24-7-68 காலை 10-30 மணிக்கு விவசாயத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், அரசியல் பகைவர்களால் தாக்கப்பட்ட தி-ப-தொ-மு-சங்கச் செயலாளரும், கழக முக்கியஸ்தருமான செ. முத்து அவர்களை மருத்துவமனையில் பார்த்து உடல் நலம் பற்றி விசாரித்துச் சென்றார்; நன்னிலம் வட்டச் செயலாளர் நடராசனும் உடனிருந்தார்.

நல்ல காரியங்கட்கு உழைப்பினை நல்குவோம்

கல்வியைப் பெருக்கி அடுத்த தலைமுறைக்கும் உழைப்போம்

காந்தி நூற்றாண்டில் நமது கடமைகள் --- மாணவரிடை அமைச்சர் நெடுஞ்செழியன் வற்புறுத்தல்

கோவை ஜூலை 31—

“காந்தியடிகளின் நூறுவது ஆண்டும், திருவள்ளுவரின் இரண்டாயிரமாவது ஆண்டும் இந்த ஆண்டுதான் துவங்குகிறது; அதனையொட்டி நாம் ஒவ்வொருவரும், நம்மால் முடிந்தவரையில் நல்ல காரியங்களுக்குப் பொருளுதவியும், உழைப்பும் நல்கவேண்டும்.”

“கல்வி வளர்ச்சிக்காக நாம் அரும்பாடுபட வேண்டியுள்ளது; குறிப்பாக, இந்தத் தலைமுறை மக்கள் செய்யும் கல்விப் பணிதான், அடுத்த பல தலைமுறை மக்களுக்கு நாம் செய்யப்போகும் பெரும் பணியாகும்; இது நம் மேல் விழுந்த பாரமாகும்”

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இங்கு அவனாசிலிங்கம் மனையியல் கல்லூரி மாணவர் மன்றத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

முன்னாள் கல்வி அமைச்சரான திரு. டி. எஸ். அவனாசிலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், திரு. நெடுஞ்செழியன் பேசுகையில் பெண் கல்வியின் அவசியத்தை எடுத்துரைத்தார்; ‘ஒவ்வொரு பெண்ணும பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகச் செயல்பட வேண்டும்’ என்றார்.

அவர் மேலும் பேசியதாவது:—

“தமிழகத்தில் இன்று பெண் கல்வி நலல முனனேற்றத்தை அடைந்து வருகிறது.

‘படித்த பெண்கள் வேலைக்குச் செல்லக் கூடாது’ என்ற கொள்கை நம்மைவிட்டு அகல வேண்டும்.

தமிழக அரசு ஆண்டுதோறும் ரூ. 58 கோடியைக் கல்விக்காகச் செலவு செய்கிறது; அதற்கு அடுத்தாற்போல்தான் மருத்துவத்திற்கு -- அதுவும் ரூ. 13 80 கோடிதான் செலவு செய்கிறது.

தமிழகத்தில் 132 கல்லூரிகள் உள்ளன; இதில் 100 தனிப் பட்டவர்களுடையவை; 32 அரசினருடையவை; இவை தவிர உயர்நிலைக் கல்வி -- துவக்கப் பள்ளிக் கல்வி வளர்ச்சிக்காக ஏராளமான பணம் செலவு செய்யப்படுகிறது. இந்த அளவுக்கு கல்வி மேலும் வளர வேண்டும்.

மேலைநாடுகளில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 90 சதவிகிதமாக இருக்கும்போது, இங்கு 40-சதவிகிதம் மட்டுமே இருக்கிறது; எனவே, இந்தத் தலைமுறை மக்களுக்குக் கல்வி வளர்ச்சிப் பணியில் மகத்தான பாரம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, சட்டப்படி 8-மணி நேரம் தான் உழைக்கவேண்டும் என்றிருந்தாலும், 12-மணி நேரம் வரையிலாவது நாம் கடுமையாக உழைத்து கல்வி முன்னேற்றத்திற்கான பணியில் முழு முயறசியில் இறங்கவேண்டும.

சாலை ஓரங்களிலும் திண்ணையிலும் தூங்குபவர்களையும், மாடு மேய்க்கும் சிறுவனையும், துவக்கப் பள்ளிக் கல்வியைக் கற்கச் செய்யவேண்டும்.

நம் மாணவர்களிடையே உள்ள ஒரு தவறான—களைய வேண்டிய குணம், அவர்கள், பரீட்சைக்காகப் படிப்பதுதான். நாம் படித்த கல்வியை அளக்கத்தான் பரீட்சையே தவிர, பரீட்சைக்காகப் படிப்பு என்ற நிலை அல்ல; இது, இன்றே மாற வேண்டும்.

தவிர, ஆசிரியர்கள் பரீட்சைக்காகப் பாடம் நடத்தும் முறையும் மாறவேண்டும்.

‘அக்டோபர்--மார்ச் பரீட்சைக்கு இந்தக் கேள்விகள் வந்துவிட்டன; எனவே, இவ்வாண்டு இதை மட்டும் படித்தால் போதும்’ என்றநிலையும் கூடாது. எல்லாப் பாடங்களையும் ஆசிரியர்கள் கற்றுத்தர வேண்டும்.

மாணவர்களின் சிந்தனைகளையும் அறிவையும் ஆற்றலையும் வளர்க்க மாணவர் மன்றம் போன்ற பேரவைகள் பெரிதும் துணையாக இருக்கும். எனவே, மாணவிகள் இதை நல்ல முறையில் பயன்படுத்தி உயரவேண்டும்; பாரதி கண்ட புதுமைப் பெண்களாகச் செயல்படவேண்டும்.

காந்தியடிகளின் 100-வது ஆண்டையொட்டி நாம் அனைவரும் பள்ளி—திருமண மண்டபம்—மருத்துவமனை ஆகியவை இல்லாத சிற்றூர்களில் அவற்றை அமைக்கும் நற்பணியில் ஈடுபடலாம்; தவிர, ஏழை மக்களுக்கு பொருள் உதவி அளிக்கலாம்; அல்லது மேற்சொன்ன காரியங்களுக்காக உழைப்பு நல்கலாம்.”

தஞ்சையில் வேளாண்மைக்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் முடிவுகளையும் தெரிவித்துள்ளன; அம்முடிவுகள், இன்று நடைபெறும் கருத்தரங்கில் வைக்கப்படுகின்றன; அது குறித்து, கருத்தரங்கில் கலந்துகொள்ளும் அமைச்சர்கள் பேசுவர்.

கருத்தரங்கு துவக்கம்

இன்றையக் கருத்தரங்கு, அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் துவங்கிற்று.

விழா மலரை, அமைச்சர் மு. கருணாநிதி வெளியிட்டார்.

கருத்தரங்கையொட்டி நடைபெறும் விவசாயக் கண்காட்சியை அமைச்சர் சே. ஏ. மதியழகன் திறந்து வைத்தார்; விவசாயக் கருவிகளும் -- அதனைப் பயன்படுத்தும் முறைகளும் இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன; இது ஒரு கிழமை நடைபெறும்.

அமைச்சர் செ. மாதவன், விவசாயிகளுக்குக் கடன் தொகை வழங்குகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு [illegible]